செ.வெ.எண் : 32/ மே நாள் : 31.05.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## 2214 விவசாயிகள் மூலம் 2766 ஏக்கர் பரப்பளவில் இரண்டாம் போக சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்பட்டுள்ளது

### கூடுதல் மகசூல் கிடைக்க கடுமையாக உழைத்த விவசாயிகளுக்கு

### மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பாராட்டு

இராமநாதபுரம் அருகே உள்ள அச்சுந்தன்வயல் கிராமத்தில் இன்று (31.05.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரடியாகச் சென்று, வேளாண்மைத்துறை ஒருங்கிணைப்புடன் விவசாயிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள இரண்டாம் போக சாகுபடி பணிகளை ஆய்வு செய்தார்கள்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் சார்பாக விவசாயிகளின் நலனை பாதுகாத்திடும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் நெல் முக்கிய பயிராக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. 2020-2021 ஆம் ஆண்டில் 1,33,823 எக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 1694 கண்மாய்கள் உள்ளன. அதில் 502 பொதுப்பணித்துறை கண்மாய்ளும், 1192 சிறு பாசன கண்மாய்களும் அடங்கும். இருப்பினும் மாவட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டம் வரட்சியான பகுதி என்ற பொதுவான பார்வை இருந்து வருகிறது. மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் முதல் போக சாகுபடி மட்டுமே ஆர்வமுடன் மேற்கொள்கின்றனர். இரண்டாம் போக சாகுபடியில் ஆர்வம் காட்டாத சூழ்நிலை இருந்து வருகிறது.

இதனை மாற்றிடும் விதமாக மாவட்டத்தில் உள்ள விவசாயிகளை முதல் போக நெல் சாகுபடியை தொடர்ந்து, இரண்டாம் போக சாகுபடி மேற்கொள்ள ஊக்கப்படுத்திடும் வகையில் வேளாண்மைத்துறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதே நேரத்தில் ஜனவரி-2021ல் இயல்பாக கிடைக்க வேண்டிய 48.5மி.மீ மழையளவானது 248.74 மி.மீ அளவு பதிவானது. இதன் காரணமாக இராமநாதபுரம் பெரிய கண்மாயில் 205 மி.கன அடி (3.6 அடி அளவு), ஆர்.எஸ்மங்கலம் கண்மாயில் 599.38 மி.கன அடி (8 அடி அளவு), களரி கண்மாயில் 256 மி.கன அடி (9.8 அடி அளவு) தண்ணீர் சேமித்திட வாய்ப்பாக அமைந்தது.

இந்த தண்ணீரை பயன்படுத்தி இப்பகுதிகளில் 5000 ஏக்கர் பரப்பளவில் இரண்டாம் போக சாகுபடி மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவித்திட இலக்காக நிர்ணயிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, வம்பன்-8, வம்பன்-10, மதுரை-1 உள்ளிட்ட ரகங்களில் உளுந்தும், டி.எம்.வி 7 மற்றும் வி.ஆர்.ஐ 3 ரக எள், எம்.சி.யூ 7 மற்றும் எஸ்.வி.பி.ஆர் 2 ரக பருத்தி விதைகள் தேர்வு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 50 சதவித அரசு மானியத்தில் வழங்கப்பட்டன. 2,214 விவசாயிகள் மூலம் 2766 ஏக்கர் பரப்பளவில் உளுந்து, பயிறு, எள், பருத்தி உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு தற்போது அறுவடை செய்யும் பருவத்தில் உள்ளன. இதன் மூலம் 9400 குவிண்டால் அளவில் கூடுதல் மகசூல் கிடைக்கப் பெற்று விவசாயிகள் கூடுதல் வருமானம் ஈட்ட வாய்ப்பாக அமைந்துள்ளது. விவசாயிகளை இரண்டாம் போக சாகுபடிக்கு ஊக்குவித்த இப்பணி மிகுந்த மன நிறைவை அளிக்கின்றது. இதற்காக கடுமையாக உழைத்த விவசாயிகளுக்கும் வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மா.பிரதீப்குமார்,இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.டாம் சைலஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.பி.தனுஷ்கோடி உட்பட வேளாண் துறை அலுவலர்கள், விவசாயிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**